1973 மார்ச் 1]

தூத்துக்குடி உரத்தொழிற்சாலை

*199 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடியில் துவக்கப்பட்டுள்ள இரசாயன உரத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு பங்குத் தொகை ஏதேனும் செலுத்தியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த 'ஃபெர்டிலைசர் பிளாண்ட்'லே நம்முடைய மாநிலத்திலே உள்ளவர்களில் இத்தனை சதவிகிதத் தினருக்கு வேலைவாய்ப்பும் கொடுக்கப்பட வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வலியுறுத்திக் கூறுமா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டப்படி அது முடியாது என்றாலும், நம் மாநில அரசின் கொள்கை அதுதான். அதை நிறைவேற்ற எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : May I know the capital of this State Government and the capital of private agencies in this factory. May I know whether it is possible to exercise control over the functioning of this plant and see to it that it immediately comes into operation? May I know when it is likely to come into operation? There has been so much of delay now.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காலதாமதம் ஆனதாகத் தெரியவில்லை. மிக விரைவாக இந்தத் தொழிற்சாலை வருகிறது என்று எல்லோரும் பாராட்டு கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் 442 இலட்சம் ரூபாய், தனியார் துறையைப் பொறுத்தவரையில் 460 இலட்சம் ரூபாய்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை எப்பொழுது உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மிக விரைவிலே தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த 'ஃபெர்டிலைசர் பிளாண்ட்'டில் கனம் அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து தனியார் துறையில் அதிக முதலீடு, அதாவது 460 இலட்சம் ரூபாய் என்றும், அரசாங்கத்தின் முதலீடு

442 இலட்சம் ரூபாய் என்று குறைவாகவும் இருக்கிறதே. எனவே அரசாங்கத்தின் பங்கை அதிகப்படுத்துவதற்கு இந்த அரசு ஏதாவது செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுத்துறையிலே ஆரம்பிப்பதாக இருந்தால் அப்படி யோசிக்கலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த உரத் தொழிற்சாலை தனியார் துறையில் இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய முதலீடு 442 இலட்சம் ரூபாயாகவும், அவர்களுடைய முதலீடு 18 இலட்சம் ரூபாய் அதிகமாக இருக்கிறது. இதில் நம்முடைய அரசின் பங்கை அதிகப்படுத்தி தேசியமயக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லும் இந்த அரசாங்கம் அதைப் பொதுத் துறையில் நடத்துவதற்கு முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தனியார் துறையில் நடப்பதாக நான் சொல்லவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை தனியார் துறையில் நடப்பதாகச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அதன் நிர்வாகத்திலே அரசுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கிறதா அல்லது தனியாருக்கு அதிக முக்கியத்துவம் இருக்கிறதா? நிர்வாகப் பொறுப்பிலே யார் முக்கியப் பொறுப்பு எடுத்துக்கொள்வார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிர்வாகம் போர்டு ஆஃப் டைரக்டர்களிடம் இருக்கிறது. அவர்களுக்கு நான்கு பேர், நமக்கு நான்கு பேர்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் கூட்டுத்துறையில் நடந்தால் நல்லமுறையில் இயங்கும் என்ற அடிப்படைக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தத் தொழிற்சாலை கூட்டுத்துறையில் நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பொதுத்துறையில் எதையெதைக் கொண்டுவர வேண்டுமோ அதைப் பொதுத்துறையிலே கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கம் தயக்கம் காட்டாது என்பதை இந்த நிதிநிலை அறிக்கை நிரூபித்து இருக்கிறது. இதுபோன்ற சில தொழிற்சாலைகள் கூட்டுத்துறையில் ஆரம்பிக்கப்பட்டால் தனியார் துறையிலே நம்முடைய கண்ட்ரோல் வரும். இவ்வளவு பெரிய தொழிற்சாலைகளில், வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற கொள்கையை வகுத்து, அதைப் பின்பற்றச் சொல்லும் அதிகாரம் வருகிறது.

1973 மார்ச் 1]

லாபம் தனியாரிடம் மட்டும் குவிகிற நிலைமையைத் தடுக்கும் வாய்ப்பிருக்கிறது. உரம் விவசாயிகளுக்கு மிகமிகத் தேவை என்பதால் பூரணமாக விநியோகிக்கும் முறையில் கொள்கையை வகுத்து, அதை விநியோகிக்கச் சொல்லக்கூடிய முறையில் அதிகாரம் நமக்கு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : நிர்வாகத்தில் தனியார் நான்குபேரும், அரசாங்கப் பிரதிநிதிகள் நான்குபேரும் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நிர்வாக கண்ட்ரோல் அரசாங்கத்திற்கு இருக்கிறதா அல்லது தனியாரிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கம்பெனி நிர்வாகம் என்றால் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ், போர்ட் ஆஃப் டைரக்டர்களில் நமக்கு நான்கு பேர்கள், அவர்களுக்கு நான்கு பேர்கள். கம்பெனியை நடத்தும் அதிகாரம் கம்பெனி வேலையாட்கள். நமக்கும் அவர்கள் வேலையாட்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இதற்கு வேண்டிய நிரந்தரமான மூலப்பொருட்கள், நாப்தா போன்றவைகள் ஒழுங்காகக் கிடைக்கும் என்று கருதுகிறதா ? அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாப்தா கிடைப்பதிலே காலதாமதம் அதிகமானது. 1971 போது நேர்ந்து வந்தது, நமக்கு நாப்தா கிடைத்தது. தொடர்ந்து அது கிடைக்கும் என்று நம்புகிறோம்.

Pension for widows

* 200 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether there is any scheme with the Government to create employment opportunities or give pension to widows in the State; and

(b) if not the reasons therefor ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) முதுவயதினருக்கு உதவிப்பணம் அளிக்கும் திட்டத்தின்கீழ் உதவிப்பணம் பெறத் தகுதியுள்ள விதவைகளுக்கு உதவிப் பணம் கிடைக்கும். விதவைகளுக்கென தனி உதவிப் பணத் திட்டம் தேவையில்லை என்று கருதப்படுகிறது.